**ஆகஸ்ட் – 28**

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## நகர உயிரியல் பல்வகைக் குறியீடு




- சென்னை தனது முதல் நகர அளவிலான உயிரியல் பல்வகைக் குறியீட்டுடன் ஒரு புதிய தரத்தை எட்டியுள்ளது.
- தமிழ்நாடு முதலமைச்சர் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் தேதியன்று சென்னை நகர உயிரியல் பல்வகைக் குறியீட்டை அறிமுகப்படுத்தினார்.
- 23 குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட இந்தக் குறியீடு ஆனது, அந்த நகரம் அதன் இயற்கை சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்தை எவ்வாறு நிர்வகிக்கிறது என்பதைக் காட்டுகிறது.
- 18 குறிகாட்டிகளின் அடிப்படை மதிப்பீட்டில் சென்னை 72 மதிப்பெண்களில் 38 மதிப்பெண்களைப் பெற்றது.
- அதன் பல்லுயிர்ப் பெருக்கத்தில் நகரம் 20 மதிப்பெண்களில் 12 மதிப்பெண்களைப் பெற்றது, ஆனால் சுற்றுச்சூழல் அமைப்புச் சேவைகளில் 16 மதிப்பெண்களில் 6 மதிப்பெண்களை மட்டுமே பெற்றது.
- நிர்வாகம் மற்றும் மேலாண்மை பிரிவில் 36 மதிப்பெண்களில் 17 மதிப்பெண்களைப் பெற்றது என்பது இது திட்டமிடலில் பல்லுயிர்ப் பெருக்கத்தின் மிதமான அளவிலான ஒருங்கிணைப்பைக் காட்டுகிறது.
- இந்தக் குறியீடானது ICLEI (வட்டார சுற்றுச்சூழல் முன்னெடுப்புகளுக்கான சர்வதேச சபை) மற்றும் தெற்காசியாவின் நிலைத்தன்மைக்கான உள்ளாட்சி அரசாங்கங்கள் ஆகியவற்றினால் தயாரிக்கப்பட்டது.

# தேசியச் செய்திகள்


## பதிவஞ்சல் சேவை நிறுத்தம்

- இந்திய அஞ்சல் துறையானது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 ஆம் தேதி முதல் அதன் புகழ்பெற்ற பதிவஞ்சல் சேவையை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

- ❖ பதிவஞ்சல் சேவையை விரைவு அஞ்சல் சேவையுடன் இணைக்க அந்தத் துறை திட்டமிட்டுள்ளது.
- ❖ 2011-12 ஆம் ஆண்டில் 244.4 மில்லியனாக இருந்த பதிவு செய்யப்பட்டப் பொருட்களின் எண்ணிக்கை 25% குறைந்து 2019-20 ஆம் ஆண்டில் 184.6 மில்லியனாகக் குறைந்தது.




## 2030 ஆம் ஆண்டில் 27 சதவிகித எத்தனால் கலத்தல்




- ❖ எரிசக்திப் பாதுகாப்பை அதிகரிக்கவும், எண்ணெய் இறக்குமதியைக் குறைக்கவும் 2030 ஆம் ஆண்டில் பெட்ரோலில் எத்தனால் கலப்பதை 27 சதவீதமாக அதிகரிக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.
- ❖ 2014 ஆம் ஆண்டில் 1.53 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்ட எத்தனால் கலப்பு சதவீதமானது 2025 ஆம் ஆண்டில் 20 சதவீதமாக அதிகரித்துள்ளது என்பதோடு இது அந்நியச்

செலாவணியைச் சேமிப்பதோடு, உமிழ்வையும் குறைக்கிறது.

- எத்தனால், கார்பன் மோனாக்சைடு உமிழ்வைக் கணிசமாகக் குறைத்தாலும், குறிப்பாக நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலங்களில் கரும்பு சாகுபடிக்காக அதிக நீர்ப் பயன்பாடு தேவைப்படுகிறது.
- அதிகரித்து வரும் எத்தனால் தேவையானது மக்காச்சோளப் பற்றாக்குறைக்கு பங்களித்துள்ளது என்பதோடு இது உணவுப் பாதுகாப்பைப் பாதிக்கிறது மற்றும் பண வீக்க அபாயங்களை ஏற்படுத்துகிறது.
- அதிக எத்தனால் கலவை கொண்ட எரிபொருளில் இயங்கும் வாகனங்கள் அவற்றுக்காக வடிவமைக்கப்படா விட்டால் அல்லது மாற்றியமைக்கப்படா விட்டால் எரிபொருள் திறன் குறையக்கூடும்.
- பயிர்த் தாளடிகள்/கழிவுகள் மற்றும் கழிவுகளிலிருந்துப் பெறப்படும் இரண்டாம் தர எத்தனால் என்பது நிலையான வளர்ச்சிக்கும் உணவுப் பயிர் சார்புநிலையைக் குறைப்பதற்கும் மிகவும் முக்கியமானது.

## தெருநாய்கள் மீதான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு





- இந்திய உச்ச நீதிமன்றம் ஆனது, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 ஆம் தேதியன்று தெருநாய்கள் தொடர்பான அதன் முந்தைய உத்தரவை மாற்றியமைத்தது.
- தெருநாய்களைத் தற்போது குடற்புழு நீக்கம் செய்யப்பட்டு தடுப்பூசி போட்ட பிறகு அவற்றின் அசல் இடங்களுக்கு அவற்றைத் திருப்பி அனுப்பலாம்.
- தெருநாய்களை விடுவிப்பதைத் தடைசெய்த முந்தைய உத்தரவு மறுஅறிவிப்பு வரும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.
- தீங்கிழைக்கும் வகையிலான அல்லது ரேபிஸ் தொற்று அறிகுறிகளைக் கொண்டுள்ள நாய்களை பொது இடங்களில் விடக்கூடாது.
- உச்ச நீதிமன்றம் ஆனது தெருநாய்கள் குறித்த ஒரே மாதிரியான தேசியக் கொள்கைக்காக நாடு முழுவதையும் உள்ளடக்கியதாக இந்த வழக்கை விரிவுபடுத்தியது.
- இந்தத் தேசியக் கொள்கையை உருவாக்கி செயல்படுத்துவதில் உதவ அனைத்து

மாநிலங்களும் ஒன்றியப் பிரதேசங்களும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11 என்ற தேதியிட்ட முந்தைய உத்தரவு, டெல்லியின் தேசியத் தலைநகரப் பிராந்தியத்தில் உள்ள அனைத்து தெருநாய்களையும் மீண்டும் விடுவிக்காமல் ஒரு பாதுகாப்பான இடத்தில் வைக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.
- மாற்றியமைக்கப்பட்ட உத்தரவு, பொதுப் பாதுகாப்பு, விலங்கு நலன் மற்றும் போராட்டங்கள் மூலம் எழுப்பப்படும் உள்ளூர்ச் சிக்கல்களை சமநிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## பூமியின் மெர்கேட்டர் வரைபடம்





- ஆப்பிரிக்க ஒன்றியம் (AU) சமமான புவி வரைபடம் போன்ற மாற்றுகளைக் கொண்டு மெர்கேட்டர் வரைபடத்தை மாற்றுவதற்கான 'Correct the Map' பிரச்சாரத்தை ஆதரித்து உள்ளது.
- மெர்கேட்டர் வரைபடமானது பள்ளிகள், ஊடகங்கள் மற்றும் இயங்கலைத் தளங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.
- இது நிலப்பரப்புகளின் அளவை அமைப்பு ரீதியாக உருவேறுபடுத்தி, ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் கிரீன்லாந்தை பெரிதுபடுத்திக் காட்டி, ஆப்பிரிக்காவை குறுக்கிக் காட்டுகிறது.
- 1569 ஆம் ஆண்டில் வடிவமைக்கப்பட்ட மெர்கேட்டர் வரைபடம் ஆனது ஒரு வழிச் செலுத்தல் சிக்கலைத் தீர்க்க முயன்ற பிளெமிஷ் வரைபடவியலாளர் ஜெரார்ட்ஸ் மெர்கேட்டரால் வடிவமைக்கப்பட்டது.
- ஒரு கப்பல் ஒரு நிலையான திசைகாட்டி திசையைப் பின்பற்றும்போது, அது கடைபிடிக்கும் ரம்ப் கோடு என்று அழைக்கப்படுகின்ற பாதையானது பெரும்பாலான தட்டையான வரைபடங்களில் உள்ள ஒரு வளைகோடாகும்.
- மெர்கேட்டரின் புவியியல் கணிப்பு வடக்கு-தெற்கு நீட்சியினை நீள் வாக்கில் அமைத்ததால் அனைத்து ரம்ப் கோடுகளும் நேர் கோடுகளாகத் தோன்றின.
- உருவேறுப்படுத்திய மெர்கேட்டர் அளவுகோல் என்றால், துருவங்களுக்கு அருகிலுள்ள நிலப்பரப்புகள் பெரிதாகவும், அதே நேரத்தில் நிலநடுக் கோட்டிற்கு அருகிலுள்ளவை உண்மையில் இருக்கும் அளவினை விட சிறியதாகத் தோன்றின.
- இதன் விளைவாக, 30 மில்லியன் சதுர கி.மீ பரப்பளவைக் கொண்ட ஆப்பிரிக்கா,

பெரும்பாலும் மெர்கேட்டர் வரைபடங்களில் 14 மடங்கு சிறிய கிரீன்லாந்தைப் போலவே பெரியதாகத் தோன்றும்.

- ஐரோப்பிய கண்டம் மூன்றில் ஒரு பங்கு பெரியதாக இருந்தாலும் ஆப்பிரிக்காவுடன் ஒப்பிடத் தக்க வகையில் பெரிதாகத் தெரிகிறது.
- இதேபோல், கனடா, ரஷ்யா மற்றும் வடக்கு ஐரோப்பா பெரிதாகத் தோன்றும் அதே நேரத்தில் ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற வெப்பமண்டலப் பகுதிகள் அளவில் குறுகி வருகின்றன.
- மெர்கேட்டர் வரைபடத்திற்கு மாற்றாக சமமான புவி வரைபடம் ஆனது 2018 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- மற்றொரு தெரிவு 1970 ஆம் ஆண்டுகளில் மீண்டும் பிரபலப் படுத்தப்பட்ட கால்-பீட்டர்ஸ் வரைபடம் ஆகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## 2024-25 ஆம் நிதியாண்டில் கடல்சார் உணவு ஏற்றுமதி




- இந்தியாவின் கடல்சார் உணவு ஏற்றுமதி 2024–25 ஆம் நிதியாண்டில் 7.45 பில்லியன் டாலரை எட்டியது.
- 2023–24 ஆம் நிதியாண்டில் 17,81,602 மெட்ரிக் டன்னாக இருந்த ஏற்றுமதி அளவு ஆனது 2024–25 ஆம் நிதியாண்டில் 16,98,170 மெட்ரிக் டன்னாகக் குறைந்தது.
- பதப்படுத்தப்பட்ட/உறைய வைக்கப்பட்ட இறால் ஆனது முன்னணி ஏற்றுமதிப் பொருளாகத் தொடர்ந்து 5.17 பில்லியன் டாலர் வருவாயினை ஈட்டியது என்பதோடு மேலும் மொத்த கடல்சார் உணவு வருவாயில் சுமார் 70% பங்கினை அளித்தது.
- முந்தைய ஆண்டில் 7,16,004 மெட்ரிக் டன்னாக இருந்த இறால் ஏற்றுமதியானது 7,41,529 மெட்ரிக் டன்னாக சற்று உயர்ந்தது.
- அமெரிக்கா 2.71 பில்லியன் டாலர் மதிப்புள்ள இறக்குமதியுடன் மிகப்பெரிய கொள்முதல் நாடாகவும், அதைத் தொடர்ந்து 1.28 பில்லியன் டாலர் மதிப்புள்ள இறக்குமதியுடன் சீனாவும் இடம் பெற்றது.
- உறைய வைக்கப்பட்ட மீன் மற்றும் கணவாய் ஆகியவை முறையே இரண்டாவது

மற்றும் மூன்றாவது சிறந்த ஏற்றுமதி பொருட்கள் இடங்களைப் பிடித்துள்ளன என்பதோடு இதன் மதிப்பு முறையே 622.60 மில்லியன் டாலர் மற்றும் 367.68 மில்லியன் டாலர் ஆகும்.

❖ இந்தியா தற்போது 130க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கடல்சார் உணவுகளை ஏற்றுமதி செய்கிறது மற்றும் உயர் மதிப்பு மிக்க உலகளாவியச் சந்தைகளுக்கு மதிப்பு கூட்டப் பட்ட சலுகைகளை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 2025 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் வெளிநாட்டு முதலீடுகள்




❖ இந்தியாவின் வெளிநாட்டு முதலீடுகள் 2024–25 ஆம் நிதியாண்டில் 67.74 சதவீதம் அதிகரித்து 41.6 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளதோடு, இது முந்தைய ஆண்டு 24.8 பில்லியன் டாலராக இருந்தது.

❖ ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 15 சதவீதம் அதிகரித்துள்ளது என்பதோடு இது இந்திய வணிகங்களில் அதிகரித்து வரும் உலகளாவிய நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது.

❖ ESG (சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை) முன்னுரிமைகள், உலகளாவிய வரிச் சீர்திருத்தங்கள் மற்றும் GIFT (குஜராத் சர்வதேச நிதித் தொழில்நுட்ப நகரம்) ஆகியவற்றால் இந்த உயர்வு பதிவானது.

❖ வளர்விகித வரி மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்புகள் காரணமாக ஐக்கிய அரபு அமீரகம், லக்சம்பர்க் மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற புதிய இடங்கள் முதலீட்டு ஆதரவைப் பெற்றன.

❖ குஜராத்தின் GIFT நகரம் ஆனது கடந்த இரண்டு ஆண்டுகளில் வெளி நாட்டு முதலீடுகளில் 100 சதவீதம் உயர்வைக் கண்டது என்பதோடு வரி சார்ந்த மேலாண்மை மற்றும் செயல்பாட்டுத் திறனை இது வழங்குகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நிலவிற்கான ஆய்வுப் பெட்டக ஏவு வாகனம்

❖ இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (ISRO) ஆனது இதுவரை இல்லாத அளவிற்கு கனமான ஏவு வாகனமான நிலவிற்கான ஆய்வுப் பெட்டக ஏவு வாகனத்தை (LMLV)

உருவாக்கி வருகிறது.


❖ LMLV ஆனது 2040 ஆம் ஆண்டிற்குள் திட்டமிடப்பட்ட நிலவு ஆய்வுக் குழு பயணங்கள் மற்றும் விண்வெளி ஆய்வுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

❖ இது நிலவிற்குச் சுமார் 27 டன் எடையுள்ள ஆய்வுக் கருவிகளையும், புவி தாழ்மட்டச் சுற்றுப்பாதைக்கு 80 டன் எடையுள்ள பொருட்களையும் கொண்டு செல்லும் திறன் கொண்டது.


❖ இந்த ஏவு வாகனம் ஆனது மேம்படுத்தப் பட்ட கிரையோஜெனிக் மற்றும் பகுதியளவு-கிரையோஜெனிக் உந்துவிசை அமைப்புகளைப் பயன்படுத்தும்.

❖ இஸ்ரோவின் ஏவு வாகன பரிணாமம் ஆனது 1963 ஆம் ஆண்டில் ஆய்வு ஏவு வாகனங்களுடன் தொடங்கியது, இதில் SLV-3, ASLV, PSLV, GSLV மற்றும் LVM-3 ஆகியவை அடங்கும்.

❖ மனித விண்வெளி ஆய்வுப் பயணம் போன்ற இந்தியாவின் இலட்சிய இலக்குகளுக்கான ஆற்றல் மற்றும் திறனில் LMLV முந்தைய அனைத்து ஏவு வாகனங்களையும் விஞ்சும்.





## S/2025 U1 துணைக் கோள்



- நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியானது, S/2025 U1 என்ற பெயரிடப் பட்ட யுரேனஸ் கிரகத்தின் 29வது துணைக் கோளைக் கண்டறிந்துள்ளது.
- இந்தத் துணைக் கோளானது தோராயமாக 10 கிலோமீட்டர் விட்டம் கொண்டது.
- இது யுரேனஸ் கிரகத்தினைச் சுமார் 56,000 கிலோமீட்டர் தொலைவில் சுற்றி வருகிறது.
- இது இன்று வரை அறியப்பட்டவற்றுள் யுரேனஸின் மிகச்சிறிய துணைக் கோளாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## 8 புதிய மின்மினிப் பூச்சி இனங்கள்




- தமிழ்நாட்டின் மின்மினிப் பூச்சிகள் பற்றிய முதல் மரபணு ஆய்வின் மூலம் ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் எட்டு மின்மினிப் பூச்சி இனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- இந்த ஆய்வை வண்டலூரில் உள்ள மேம்பட்ட வனவிலங்கு பாதுகாப்பு நிறுவனம் (AIWC) நடத்தியது.
- இந்த ஆய்வு மணம்பொல்லி, பொள்ளாச்சி மற்றும் உலந்தி வனப்பகுதிகளில் உள்ள 10 தளங்களில் மேற்கொள்ளப்பட்டது.
- அடையாளம் காணப்பட்ட இனங்கள் அப்ஸ்கொண்டிடா பெர்ப்ளெக்ஸா, அப்ஸ்கொண்டிடா டெர்மினலிஸ், அசிமெமெட்ரிக்டா ஹுமராலிஸ், மூன்று கர்டோஸ் இனங்கள், லாம்ப்ரிகேரா sp. மற்றும் பைரோகோலியா sp ஆகியனவாகும்.
- ஃபோட்டோடாக்டிக் நடத்தை என்ற ஒளியின் தூண்டுதலுக்கு ஏற்ற வகையிலான இயக்கம் குறித்தப் பகுப்பாய்வு, அப்ஸ்கொண்டிடா பெர்ப்ளெக்ஸா இருளை விரும்புவதாகவும், பெரும்பாலான வண்ண விளக்குகளைத் தவிர்ப்பதாகவும் காட்டியது.
- அப்ஸ்கொண்டிடா பெர்ப்ளெக்ஸா இனத்தில் வெள்ளை ஒளி சார்ந்த இயக்கத்தின் பொருட்டு நடுநிலையாக இருப்பது கண்டறியப்பட்டது.

### IBCA கூட்டணியில் நேபாளம்





- கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் நேபாள நாடானது சர்வதேசப் பெரும் பூனை இனங்களின் கூட்டணியில் (IBCA) அதிகாரப்பூர்வமாக இணைந்தது.
- IBCA என்பது உலகளவில் ஏழு பெரும்பூனை இனங்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும் 90க்கும் மேற்பட்ட நாடுகளின் கூட்டணியாகும்.
- நேபாளத்தில் பனிச்சிறுத்தை, புலி மற்றும் பொது வகையான சிறுத்தை ஆகியவை காணப்படுகின்றன எனவே இது உலகளாவியப் பாதுகாப்பு முன்னெடுப்புகளை மேம்படுத்துகிறது.
- நேபாள நாடானது 2009 ஆம் ஆண்டில் 121 ஆக இருந்த அந்நாட்டின் புலிகளின் எண்ணிக்கையை 2022 ஆம் ஆண்டில் 355 ஆக கிட்டத்தட்ட மூன்று மடங்காக உயர்த்தியுள்ளது.
- பெரும் பூனை இனங்கள் காணப்படும் நாடுகளிடையே ஒத்துழைப்பு மற்றும் வளப் பகிர்வை ஊக்குவிக்க இந்தியா 2023 ஆம் ஆண்டில் IBCA கூட்டணியைத் தொடங்கியது.
- உலகளவில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பெரும் பூனை இனங்களின் பாதுகாப்பிற்கான கூட்டு நடவடிக்கையை இந்த கூட்டணி ஆதரிக்கிறது.

## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### 2025 ஆம் ஆண்டிற்கான உலகின் சீர்மிகு நகரங்கள்

- சர்வதேச மேலாண்மை மேம்பாட்டு நிறுவனம் (IMD) ஆனது 2025 ஆம் ஆண்டு சீர்மிகு நகரக் குறியீட்டினை வெளியிட்டது.
- சூரிச் AAA மதிப்பீட்டில் முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து ஒஸ்லோ மற்றும் ஜெனீவா ஆகிய இரண்டும் AAA மதிப்பீடுகளுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளன.

- துபாய் 12வது இடத்திலிருந்து 4வது இடத்திற்கு முன்னேறி, A மதிப்பீட்டுடன் முதலிடத்தில் உள்ளது.
- இலண்டன் AA மதிப்பீட்டில் இரண்டு இடங்கள் முன்னேறி 6வது இடத்தைப் பிடித்துள்ளது.
- லௌசேன் 10வது இடத்தைப் பிடித்ததுடன், இப்பட்டியலில் மூன்று சுவிஸ் நகரங்கள் முதல் பத்து இடங்களில் உள்ளன.
- இந்தக் குறியீடு ஆனது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, இயக்கம், செயல்பாடுகள், வாய்ப்புகள் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றின் அடிப்படையில் நகரங்களை மதிப்பிடுகிறது.
- 2025 ஆம் ஆண்டு குறியீட்டில் உலகின் முதல் 100 இடங்களுக்கு அப்பால் இந்திய நகரங்கள் இடம் பெற்றுள்ளன.
- டெல்லி (CC), மும்பை (CC), ஐதராபாத் (CCC), மற்றும் பெங்களூரு (CC) ஆகியவை முறையே 104வது, 106வது, 109வது மற்றும் 110வது இடங்களைப் பிடித்தன.





# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## விட்டல்பாய் படேலின் தலைமையின் 100 ஆம் ஆண்டு நிறைவு

- இரண்டு நாட்கள் அளவிலான அகில இந்திய சபாநாயகர்கள் மாநாடு டெல்லி சட்டமன்றத்தில் நடைபெற்றது.
- விட்டல்பாய் படேல் மத்திய சட்டமன்றத்தின் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியத் தலைவராக பொறுப்பேற்றதன் 100 ஆம் ஆண்டு நிறைவினை இந்த மாநாடு நினைவு கூறியது.
- சட்டமன்றச் சபாநாயகர்களின் பணிகளைத் தொடர்ந்து வழி நடத்தும் பல்வேறு நடைமுறைகளை அவர் நிறுவினார்.
- அவரது பதவிக் காலத்தில் மத்திய அரசு அளவிலும் மாநிலங்களிலும் சட்டமன்றத் துறை மற்றும் செயலகம் நிறுவப்பட்டன.

- விட்டல்பாய் படேல், சட்டமன்றங்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டிலிருந்து சுதந்திரமாக இருப்பதை வலியுறுத்தினார்.
- பிரிட்டிஷ் இந்தியாவின் சட்டமன்றத்தின் கீழ் அவையாக மத்தியச் சட்டமன்றம் இருந்தது.
- இந்த அவை ஆரம்பத்தில் தற்போது டெல்லி சட்டமன்றத்தைக் கொண்டிருக்கும் கட்டிடத்தில் கூடியது.




# விளையாட்டுச் செய்திகள்

## டுராந்த் கோப்பை 2025



- நார்த் ஈஸ்ட் யுனைடெட் கால்பந்து கிளப் (FC) அணியானது தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக டுராந்த் கோப்பையை வென்றது.
- 134வது டுராந்த் கோப்பைப் போட்டியானது கொல்கத்தாவில் உள்ள விவேகானந்தா யூபா பாரதி கிரிரங்கன் அரங்கில் நடைபெற்றது.
- ஆசியாவின் பழமையான இக்கால்பந்துப் போட்டியில் ஆறு இந்திய சூப்பர் லீக் (ISL) அணிகள் பங்கேற்றன.

# இதரச் செய்திகள்

## உலகம் முழுவதும் உள்ள 10 யுனெஸ்கோ உலக பாரம்பரிய குகைகள்



- அமெரிக்காவில் உள்ள 643 கிலோமீட்டருக்கும் அதிகமான நீளம் கொண்ட மாமத் குகை தேசியப் பூங்கா உலகின் மிக நீளமான குகை அமைப்பாகும்.
- அமெரிக்காவில் உள்ள கார்ல்ஸ்பாட் குகை தேசியப் பூங்காவானது, large Big Room chamber என்ற குகை உட்பட 119க்கும் மேற்பட்ட குகைகளைக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் மகாராஷ்டிராவில் உள்ள எலிஃபாண்டா குகைகள், பண்டைய இந்து மற்றும் புத்த குடைவரை சிற்பங்களைக் கொண்டுள்ளன.
- இந்தியாவில் உள்ள அஜந்தா குகைகளில் கிமு 2 ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய ஓவியங்கள் மற்றும் சிற்பங்களுடன் கூடிய புத்தக் கோவில்கள் உள்ளன.
- இந்தியாவில் உள்ள எல்லோரா குகைகளில் 6 முதல் 10 ஆம் நூற்றாண்டு வரையிலான பௌத்தம், இந்து மதம் மற்றும் சமண மதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் குடை வரைக் கோயில்கள் உள்ளன.
- ஸ்லோவேனியாவில் உள்ள ஸ்கோக்ஜன் குகைகள் ஆனது ரேகா நதியால் உருவான மிகப்பெரிய நிலத்தடிப் பள்ளத்தாக்குகளில் ஒன்றாகும்.
- வியட்நாமில் உள்ள போங் நா-கே பேங் தேசியப் பூங்காவில் உலகின் மிகப்பெரிய குகைப் பாதையான ஹாங் சன் டூங் உள்ளது.
- மலேசியாவில் உள்ள குனுங் முலு தேசியப் பூங்கா மிகப்பெரிய குகைப் பகுதிகளில் ஒன்றான சரவாக் குகைக்கு புகழ் பெற்றது.
- சீனாவில் உள்ள மொகாவோ குகைகளில் கி.பி 366 ஆம் ஆண்டினைச் சேர்ந்த புத்தக் கலை வடிவங்களுடன் கூடிய 735 குகைகள் உள்ளன.
- தென்னாப்பிரிக்காவில் உள்ள ஸ்டெர்க்ஃபோன்டைன் குகைகள் மனிதகுலத்தின்

தொட்டில் எனப்படும் (Cradle of Humankind) தளத்தின் ஒரு பகுதியாகும் என்பதோடு மேலும் இவை மனிதப் பரிணாம ஆய்வுகளுக்கு முக்கியமானவையாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★